CENTRE FOR COMBATING TOBACCO
Faculty of Medicine, University of Colombo
40/18, Park Road, Colombo 5, Sri Lanka
Tel:+94 112 599 852, +94112581571
Fax: +94112581572
Email: tobaccounmasked@gmail.com
Web: www.cct.lk / www.tobaccounmasked.lk

# புகையிலைத் தொழிற்துறையினரின் செயற்பாடுகளிலிருந்து இளைஞர்களைப் பாதுகாப்பதோடு புகையிலை மற்றும் நிகோடின் பயன்பாட்டை அவர்களிடையே தடுத்தல்: உலக புகையிலை ஒழிப்பு தினம் 31 மே 2020

புகையிலைத் தொற்றானது ஆண்டுதோறும் 8 மில்லியன் மக்களைக் கொல்கின்றது என்ற கவனத்தை ஏற்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் (WHO), 1987 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு ஆண்டும் மே 31 ஆம் திகதி உலக புகையிலை ஒழிப்பு தினம் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு இளைஞர்களை புகையிலைத் தொழிற்துறையின் செயற்பாடுகளிலிருந்து பாதுகாப்பதோடு புகையிலை மற்றும் நிகோடின் பயன்பாட்டைத் தடுத்தல் எனும் கருப்பொருளைக் கொண்டு இளைஞர்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறது, ஏனெனில் இளைஞர்களுக்கு தங்கள் தயாரிப்புகளை விற்பதை புகையிலைத் தொழிர்துறையினர் முக்கிய இலக்காகக் கொண்டுள்ளனர்.

இலங்கையானது 2003 ஆம் ஆண்டில் WHO இன் புகையிலைக் கட்டுப்பாடு தொடர்பான சட்டவாக்கத்திற்கு (FCTC), தமது பிராந்தியத்திலேயே முதன் முதலில் ஒப்புதல் அளித்தது. FCTC இன் கட்டுரை 13 (புகையிலை விளம்பரம், ஊக்குவிப்பு மற்றும் அனுசரணைகள்) மற்றும் 16 (வயது குறைந்தவர்களிற்கு விற்றல்) ஆனது அனைத்து வகையான புகையிலை விளம்பரங்கள் மற்றும் அனுசரணைகளைத் தடை செய்வதற்கும், சிறுவர்களுக்குப் புகையிலை பொருட்கள் விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கும் பரிந்துரைக்கிறது. புகையிலை மற்றும் மதுபானம் மீதான தேசிய அதிகார சபை (NATA) சட்டமானது அனைத்து வகையான புகையிலை விளம்பரங்களையும், ஊக்குவிப்புக்கள் மற்றும் நிதியுதவிகளையும் தடைசெய்கிறது, மேலும் 21 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு புகையிலைப் பொருட்களை விற்பனை செய்வதையும் தடை செய்கிறது.

புகையிலையானது அதன் நுகர்வோரில் அரைவாசியினரை இளம் வயதிலேயே கொல்வதுடன் ஆண்டொன்றிற்கு இலங்கையில் 20,000 பேரையும் உலகளவில் 8 மில்லியனுக்கும் அதிகமானவர்களையும் கொல்கிறது. புகையிலைத் தொழிற்துறையானது தமது வணிக வர்த்தகத்தின் இலாபம் மற்றும் தங்கள் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த மேலும் புதிய நுகர்வோரைப் பெற வேண்டும். எனவே புகையிலைத் தொழிற்துறையானது நேரடி மற்றும் மறைமுக விளம்பரங்கள், அனுசரணைகள், சுவையூட்டிய தயாரிப்புகளை வெகுவாக பிரபல்யப்படுத்துதல் , திரைப்படங்கள், தொடர் நாடகங்கள் மற்றும் சமூக ஊடக தளங்களில் பலவிதமான விளம்பரப்படுத்தல்கள் மேலும் சமூக கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளில் சிகரெட்டுகளை இலவசமாக விநியோகித்தல் போன்ற தந்திரோபாயங்களைக் கொண்டு சிறுவர்கள் மற்றும் இளைஞர்களைக் கவர்வது தொடர்பில் ஏராளமான சான்றுகள் கிடைத்துள்ளன.

புகையிலை தொழிற்துறை அவதான நிலையம் (CCT) என்பது இலங்கை மற்றும் தெற்காசியா பிராந்தியத்தின் புகையிலைத் தொழிற்துறை அவதான ஆய்வகமாகும், இது பொது சுகாதாரத்தைப் பாதிக்கும் புகையிலைத் தொழிற்துறையின் குறுக்கீடுகள் மற்றும் செயற்பாடுகளைக் கண்காணிக்க FCTC கட்டுரை 5.3 இன் கீழ் நிறுவப்பட்டுள்ளது. *TobaccoUnmasked HotSpots* (*TU HotSpots*) கையடக்கத் தொலைபேசிச் செயன்முறை மற்றும் வரைபடம் வழியாக இலங்கை பூராக, புகையிலைத் தொழிற்துறையினரின் குறுக்கீடுகளைச் சமூகத்திலுள்ளவர்களும் கண்காணிக்க, சமூகத்தால் இயக்கப்படும் புகையிலைக் கண்காணிப்பு அமைப்பு (CDTSS) ஊடாக வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் நீங்கள் விரும்பும் எந்த மொழியிலும் புகையிலைத் தொழிற்துறையினரின் குறுக்கீடுகளைப் புகாரளிக்க முடியும். புகையிலைத் தொழிற்துறையினர் பல்வேறு தந்திரோபாயங்களின் மூலம் இளைஞர்களைக் குறிவைத்தல் போன்ற ஏதேனும் சம்பவங்கள் தொடர்பில் நீங்கள் அறிந்தால் அதை *TU HotSpots* கையடக்கத் தொலைபேசி App மூலம் புகாரளிக்கலாம், இது இலவசமாகப் பதிவிறக்கம் செய்யக்கூடியது மற்றும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், உங்கள் முறைப்பாடுகளை உங்களது அடையாளத்தை வெளிப்படுத்தாமலும் நேரடியாக CCT இற்கு tobaccounmasked@gmail.com மின்னஞ்சல் முகவரி வழியாக அல்லது www.cct.lk வலைத்தளம் வழியாக தெரிவிக்கலாம்.

இலங்கையில் இடம்பெறும் புகையிலைத் தொழிற்துறையினரின் குறுக்கீடுகளானவை எமது ஆய்வு மற்றும் CDTSS இன் முறைப்பாடுகளின் அடிப்படையில் அறிக்கையிடப்பட்டு எமது TobaccoUnmasked (www.tobaccounmasked.lk) தகவல் தளத்திலும் மற்றும் தெற்காசியா பிராந்தியங்களில் இடம்பெறும் புகையிலைத் தொழிற்துறையினரின் குறுக்கீடுகளானவை எமது ஆய்வுகளின் அடிப்படையில் அறிக்கையிடப்பட்டு TobaccoUnmaskedSouth.Asia (www.tobaccounmaskedsouth.asia) தகவல் தளத்திலும் விவரிக்கப்பட்டுள்ளன. CCT ஆனது, அதன் பிராந்திய புகையிலைக் கண்காணிப்பு வலையமைப்பான, புகையிலைத் தொழிற்துறையை அவதானிப்பதற்கான தெற்காசிய பிராந்திய கூட்டமைப்புடன் (SARC-CCT) இணைந்து உலக புகையிலை ஒழிப்பு தினம் 2020 ஐ அனுஷ்டிப்பதற்கு காசநோய் மற்றும் மார்பு நோய்கள் தொடர்பான சர்வதேச ஒன்றியத்தின் (The Union) உதவியுடன் ஒரு சர்வதேச நிகழ்ச்சித் தொடரை ஏற்பாடு செய்துள்ளது. இளைஞர்களை குறிவைத்து பிராந்தியத்தில் இடம்பெறும் புகையிலைத் தொழிற் துறையினரின் தந்திரங்களை அம்பலப்படுத்தல் மற்றும் அதன் தடுப்பு தொடர்பான அனுபவங்களையும் வெற்றிக் கதைகளையும் பகிர்ந்து கொள்ளுவதும் இதன் நோக்கமாகும். இந் நிகழ்ச்சியிற்கான நேர அட்டவணை இவ் அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது, நீங்கள் அனைவரும் இந் நிகழ்ச்சித் தொடரில் பங்கு பற்றி உங்கள் திறன்களை மேம்படுத்துவீர்கள் என்று நம்புகிறோம், இதன்மூலம் இலங்கை மற்றும் பிராந்தியத்தில் புகையிலைத் தொழிற்துறையை எதிர்த்துப் போராடுவதற்கும், இளைய தலைமுறையினரை புகையிலை மற்றும் அது தொடர்பான தீங்குகளிலிருந்து பாதுகாப்பதற்கும் நீங்கள் எங்களுடன் கைகோர்க்க முடியும்.

CCT அங்கத்தவர்கள்<br>
31 மே 2020